விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆடி 24 ஜுல்கஃ 10 திகழ் 175
யாழ்ப்பாணம் புதன்கிழமை 8 8 84

## இடம்பெயர்ந்த குடும்பங்களை அரச அதிபர் சந்தித்தார்!

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த அசம்பாவித சம்பவங்களினால் பாதிக்கப்பட்டு தனியார் வீடுகளில் தங்கியுள்ள குடும்பங்களை யாழ். மாவட்டச்செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. மு. பஞ்சலிங்கம் சந்தித்து ஆறுதல் கூறினார்.

அரசாங்க அதிபருடன் அத்தியாவசிய சேவைகள் உதவி ஆணையாளர் திரு. என். தர்மபாலன், உதவிசமூகசேவை பணிப்பாளர் திருமதி சிவசிதம்பரம், உள்நாட்டுவர்த்தக உதவிஆணையாளர் திரு. மார்க்கண்டு கரவெட்டி, பருத்தித்துறை உதவிஅரசாங்க அதிபர்களும் சென்றிருந்தனர்.

கரணவாய் தெற்கு, கம்பர்மலை, நெடியகாடு, புலவராரோடை, லுக்கலாவத்தை, உடுப்பிட்டி ஆகிய இடங்களில் தனியார்வீடுகளில்ஏராளமான குடும்பங்கள் தங்கியுள்ளன. இந்த குடும்பங்களைப் பார்வையிட்ட அரசஅதிபர், உணவு, பானம், குழந்தைகளுக்கு பால்மா முதலியவற்றை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்துள்ளார்.

இதைத் தொடர்ந்து தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி, யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி விஜயக்கோன். இணைப்பு அதிகாரி நளின் செனவிரத்ன

(6ம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணம் நேற்றும் வெறிச்சோடிக் காணப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்து மக்களைத் தத்தமது வீடுகளிலேயே தங்கியிருக்குமாறு அரசாங்கம் வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்து நேற்று யாழ். நகர் வெறிச்சோடிக் காணப்பட்டது**

கடைகள், வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டு, போக்குவரத்துச் சேவைகள் நிலைகுலைந்து, வீதிகளில் சன நடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

நவீன மார்க்கெட் கடைகள் யாவும் நேற்றுப் பூட்டப்பட்டிருந்தன. தியேட்டர்களில் சினிமாப் படங்கள் ஓடவில்லை. பஸ் நிலையத்திலுள்ள கடைகளில் 7 கடைகள்மட்டும் திறந்திருந்தன 3 கடைகள் ஒற்றைக் கதவில் திறந்திருந்த போதிலும் வியாபாரம் எதுவும் நடைபெறவில்லை.

ஆஸ்பத்திரி வீதியில், தனியார் மருந்து விற்பனை நிலையங்கள் உட்பட சகல கடைகளும் மூடப்பட்டிருந்தன.

இ.போ.ச. பஸ்சேவை வழக்கம்போல் நடைபெற்றபோதிலும் பிரயாணிகள் குறைவாகக் காணப்பட்டனர். மினி பஸ் சேவைகளும் குறைவாகக்

(6-ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் நேற்று

[வவுனியா]

வவுனியாவில் நேற்றுக் கடைகள் திறக்கப்படவில்லை.

நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது. வீதிகளில் சன நடமாட்டமும் இருக்கவில்லை.

## யாழ். மக்களுக்கு அரசுவேண்டுகோள்:
# "அவசியமின்றி வீதிகளில் நடமாடவேண்டாம்!"
## வானொலி செய்திக்குத் திருத்தம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் ஆயுதப் படைகள் தீவிரவாதிகளுக்கு எதிராக தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதால் பொது மக்கள் அவசியமில்லாமல்வீதிகளில் திரிய வேண்டாம் என அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் மாலையும் நேற்று காலையிலும் இலங்கை வானொலியில், யாழ்ப்பாண மக்களைத் தம் வீடுகளிலேயே தங்கியிருக்கும்படியாக விடுக்கப்பட்ட செய்தித் தவறு என்றும், மக்களை அநாவசியமாக வீதிகளில் திரிய வேண்டாம் என்றும் அவசியமான அலுவல்களுக்கு மாத்திரம் வீடுகளிலிருந்து வெளியேறும்படியும் மாத்திரமே அரசு வேண்டுகோள் விடுத்துள்ளதாக ராஜாங்க அமைச்சைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வானொலிச் செய்தியில் பயங்கரவாதிகளுக்கு எதிராக தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படவிருப்பதால் யாழ்ப்பாண மக்கள் தம் வீடுகளிலேயே இருக்கும்படி கேட்கப்படுகிறார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

விளக்கமற்ற இச்செய்தியால் பொது மக்களும், வெளியிடங்களுக்கு வேலைக்குச் செல்லும் அரச, தனியார்துறைஊழியர்க என்ன செய்வதறியாது திகைப்

(6ம் பக்கம் பார்க்க)

## இலங்கை வங்கி கொள்ளை முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கி பிரதான அலுவலகம் நேற்று முன்தினம் இரவு ஆயுதம்தாங்கியவர்களினால் முற்றுகையிடப்பட்டுக் கொள்ளைமுயற்சி மேற்கொள்ளப்பட்டது.

வங்கியிலுள்ள பாதுகாப்பான இரும்புப் பெட்டி குண்டு தாக்குதலினால் நசுங்கி விட்டதால், உடனடியாக விபரம் வங்கி அதிகாரிகளினால் பெற முடியவில்லை. கொள்ளை எதுவும் நடக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினமிரவு 10-30 மணிக்கு முதலாவது குண்டு வெடிச் சத்தத்தை தொடர்ந்து 10 நிமிடத்திற்கு ஒரு தடவையாக 7 குண்டுகள் வெடித்தன. அதிசக்தி வாய்ந்ததாகக் கூறப்

(6-ம் பக்கம் பார்க்க)

## கொலை என்று தீர்ப்பு

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலியைச் சேர்ந்த சோமு ஞானசேகரத்தின் மரணம் நேற்றுக் கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இம்மரணம் தொடர்பாக யாழ். நீதவான் எஸ். நாக

(6ம் பக்கம் பார்க்க)

## அலுவலக ஊழியர் விசாரணை

[வவுனியா]

வவுனியா உயர் பொலிஸ் அதிகாரியின் சடலம் நேற்றுக் காலை அவரதுசொந்த ஊருக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இவரின் பிரேத பரிசோதனையை வவுனியா மாவட்ட வைத்திய அதிகாரி எஸ். நிரஞ்சன் மேற் காண்டார்.

இக்குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக உயர் பொலிஸ் அதிகாரியின் அலுவலக ஊழியர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

## செய்தித் தணிக்கை!

அவசரகாலச் சட்டம் 14(1) விதிகளுக்கு அமையப்பின்வரும்விஷயங்களைப் பத்திரிகைகளில்பிரசுரிக்கராஜாங்கஅமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்துடன் தொடர்புடைய வன்செயல்கள்பற்றிய நடவடிக்கைகள்.

கொள்ளை, மற்றும் அரச, தனியார் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தல்.

பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகள், பயங்கரவாத நடவடிக்கைகள் பற்றிய விசாரணைகள்.

தேசிய ஒற்றுமையையும், சட்டத்தையும் அல்லது சமூகத்திற்குத் தேவையான விநியோகம், சேவைகள் போன்றவற்றைப் பாதிக்கக்கூடிய விஷயங்கள்.

## துப்பாக்கிச் சூட்டில் பலி

[யாழ்ப்பாணம்]

ஓட்டுசுட்டானைச் சேர்ந்த 52 வயதான கடை உரிமையாளர் அம்பலவாணர் அப்பாத்துரை ஒட்டுசுட்டானில் நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் பலியானார்.

நேற்று முன்தினம் காலை 6மணிக்குக் கடைக்குச் சென்று திறந்து பார்த்தபின்னர் கடையைப் பூட்டிவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

### ஆங்கிலக் கால்வாயில்
## ஆழிக்குமரன் உயிர் பிரிந்தது!

(லண்டனிலிருந்து மாலி)

உலகசாதனைகள் பலவற்றைச்செய்த ஆழிக்குமரன் ஆனந்தன் ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடக்கும் சாதனை முயற்சியை மேற்கொண்டிருந்தபோது, அவர் உயிர் பிரிந்தது!

இலங்கைத் தமிழர்களின் பெரும் சொத்தாக விளங்கிய ஆனந்தன், ஆங்கிலக் கால்வாயை நான்கு தடவை நீந்திக் கடந்து உலக சாதனையை நிலைநாட்டுவதற்காக, கடந்த வருடம் இங்கிலாந்து சென்றார்.

முப்பத்தொன்பது வயதான ஆனந்தன், ஆங்கிலக் கால்வாயை நீந்தத்தொடங்கி நான்கு மணி நேரத்தின் பின், சுய நினைவு இழந்தார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## ஆனந்தன் கனவு பற்றி 'ஏஷியன் டைம்ஸ்'

(லண்டன்)

"அதி குளிர் மிக்க ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்து சாதனை புரிய வேண்டுமென்பது குமார் ஆனந்தனின் 15 வருடக் கனவாகும். இக்கால்வாயை நான்கு தடவைகள் நீந்திக் கடப்பதே இவரின் நோக்கமாகும் எந்த ஒரு ஆசிய நாட்டவரும் நான்கு தடவைகள் ஆங்கிலக் கால்வாயைக் கடக்கும் முயற்சியில் இறங்கவில்லை. ஒரேயொரு அமெரிக்கரான ஜோன் எரிக்ஸன் என்பவரே ஏழாவது முயற்சியாக நான்கு தடவைகள் கடக்க முயன்றார். ஆனால் அவரால் மூன்று தடவை மட்டுமே அப்படிச் செய்ய முடிந்தது.

(6-ம் பக்கம் பார்க்க)

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பால் மாடு விற்பனைக்கு. இரண்டு மாதத்தில் கன்று ஈனும். கலப்பு இனம். நாளுக்கு 8 போத்தலுக்கு மேல். தொடர்புகொள்ளவும்: 37/6, சிவகுருநாதர் வீதி, யாழ்ப்பாணம். 1225

BAIRAHA FARMS HISEX வெள்ளை, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 13ந், 20ந் திகதிகளில் விநியோகிக்கப்படும். சற்குணராசா பிறதர்ஸ் பிரம்படி, கொக்குவில். 1244

கமறுக்கள் - றேடியோக்கள் - சகலவித தளபாடங்கள் - கார் சீற்கவர்கள் - அலுமாரிகள் - சைக்கிள்கள் - ICMA புத்தகங்கள் - கடிகாரவகைகள் - இன்னும் அநேக பொருட்கள். விபரங்களுக்கு முத்திரைக் கவருடன் விண்ணப்பிக்கவும்: கார்த்திகேசு, ஏல விற்பனை நிலையம், கோப்பாய். (1189)

## விற்பனைக்கு

சில்லாலை சென். செபஸ்ரியன் ஒழுங்கையில் இரண்டாவதாக இருக்கும் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. மொத்தமாகவும் (கொடுக்கப்படும்) துண்டுகளாகவும் விற்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: K. ஞானசேகரன், சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு. (1252)

எம்மிடம் நல்லஇன எருதுக் கன்றுகளும், தரமான எருவும் விற்பனைக்குண்டு மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். பொதுமுகாமையாளர், நல்லூர்த் தொகுதி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். 1243

## வாடகைக்கு

Farm School இற்கு அண்மையில் சகல வசதிகளுடன் ஒரு படுக்கை அறையுள்ள வீடு உடன் வாடகைக்குண்டு. சிறு குடும்பம் விரும்பத்தக்கது. தொடர்பு ராஜசுந்தரம், கொக்குவில் வீதி [இந்துவாலிபர் சங்கத்திற்கு முன்பாக), திருநெல்வேலி வடக்கு. 1201

## வெற்றிடங்கள்

1. தொழிற்சாலை மேற்பார்வையாளர்: N. D. T / N. C. T (Civil Eng.)/ரெருசோதளம் அமைத்தல் சம்பந்தமான தொழில் அனுபவம் உடையோர்.
2. BULLDOZER OPERATOR
3. தளக்கற்கள் மினுக்குவோர் (பெண்கள் மட்டும்)
4. STOREMEN (களஞ்சிய ஊழியர்)

15-08-84க்கு முன் விண்ணப்பிக்கவும்.

MANAGER
THE TERRAZZO CONTRACTORS
AND CONSULTANTS
64, Point Pedro Road, Nallur, Jaffna.

## Building Technological Institute

கட்டிடத் தொழில்நுட்பவியல் நிறுவனம்

(கட்டிடக் கலைஞர்களாலும் பொறியியலாளர்களாலும் நன்மதிப்பைப் பெற்ற ஒரே ஒரு நிறுவனம்)

136, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

**ஆரம்பம்: 10–08–84 காலை 10–00 மணி**

DIPLOMA IN DRAUGHTSMANSHIP.
(5 மாதப் பயிற்சி)
DIPLOMA IN QUANTITY SURVEYING PART II
(City Guilds London)

விரிவுரையாளர்கள்:- S. RATNESINGAM
G. RATNASINGAM.
1235

## யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்



நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக்

**24 மணிநேர சேவை**

யாழ் நகர அலுவலகம்
28/18 - 1·1 மகாத்மா காந்தி ரோட்,
(சலுசலவுக்கு அண்மையில்)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ்:- 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்
அவுஸ்திரேலியா கட்டிடம்
த.பெ.1917, 54 யோர்க் வீதி, கொழும்பு :
ரெலெக்ஸ்:- 21652, 21742 21918 21931, PERIMR CE
தொலைபேசி:-22726 547884, 548626, 549065, 549066

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

தெல்லிப்பழை, தென்மேற்கு, பெரியாவுடை என்னும் இடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற மார்க்கண்டு நாகமுத்துவின் மரணசாதன மற்ற சொத்துக்கள் பற்றிய விடயம்.

— காலம்சென்றவர்

நாகமுத்து கைம்பெண் சின்னம்மா பெரியாவுடை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை. — மனுதார்

இல. தத்துவம் 209

மேற்குறித்த இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடரப்பட்டு அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 10ம் திகதி அன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் ஏதும் இருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்

1984-ம் ஆண்டு ஆடி மாதம் 20-ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
**ஆழ்வார் சிவபாதசுந்தரம்**
பதிவாளர்.

வரைவு:
V. S. கணேசலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.
1258

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

கதிரிப்பாய், அச்சுவேலியைச் சேர்ந்த இராமுப்பிள்ளை செல்லத்துரை சுப்பிரமணியம் என்பவரின் மரணசாதனமற்றமரணச் சொத்துக்களின் விடயத்தில்

— மரணமெய்தியவர்

மரணசாதன )
நியாயாதிக்கம்)
இல. ரி / 211

செல்லத்துரை சுப்பிரமணியம் கைம்பெண் சிவஞானவதி, கதிரிப்பாய், அச்சுவேலி.

— மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிக்கப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984-ம் ஆண்டு ஆவணி மாதம் 22-ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984-ம் ஆண்டு ஆடி மாதம் 31-ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
**ஆழ்வார் சிவபாதசுந்தரம்,**
பதிவாளர்.

தயாரித்தவர்:
க. வ. பாலசிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி,
(1176)

மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை

# ஆசிரியர் பற்றுக்குறையை நீக்க நடவடிக்கை

(புலோலி)

''மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாலயம் தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும், சைவசமய வளர்ச்சிக்காகவும் பெருந்தொண்டாற்றி வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்' இவ் வித்தியாலயத்தின் ஆசிரிய பற்றுக்குறையை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.''

இவ்வாறு மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலய பெற்றோர் தினத்திலும் 'பரிசளிப்பு விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் கல்விப்பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை குறிப்பிட்டார். அதிபர் திரு. என். சிவபாதசுந்தரம் விழாவிற்குத் தலைமை தாங்கினார், ஆசிரியர் திரு. எஸ். கதிர்காமத்தம்பி வரவேற்புரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து உரையாற்றிய கல்விப்பணிப்பாளர் குறிப்பிட்டதாவது:

''அரசாங்கம் மாத்திரம் பாடசாலைகளின் அபிவிருத்திகளை மேற்கொண்டு பேணி வளர்க்க முடியாது. பொதுஸ்தாபனங்களும் கல்வியில் அக்கறையுள்ள ஸ்தாபனங்களும் பாடசாலைகளின் அபிவிருத்தியில் அதிக கவனமெடுக்கவேண்டும். இப்பகுதி பெற்றோர்களும் பழைய மாணவர்களும் இவ்வித்தியாலயத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பூரண ஆதரவு வழங்குவது மகிழ்ச்சிக்குரியதாகும், இப்பகுதி மாணவர்களுக்கு இப்பாடசாலை முழுமையான கல்வியை வழங்குகின்றது. அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்களை மையமாக வைத்து சிறந்த சேவையாற்றினால் கூடிய ஆயுளைப் பெறுவார்கள்.

இன்று சமயக்கல்வி போதனை மிக இன்றியமையாதது. இதனைக் கருத்திற் கொண்டே அரசாங்கமும் கல்வித்திட்டததில் சமயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது. சமயம் இல்லாத விஞ்ஞானம் விஞ்ஞானமில்லை. விஞ்ஞானம் இல்லாத சமயம் கல்வியாகாது, இப்பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றுக்குறையைப் போக்க நடவுடிக்கை மேற்கொள்ளப்படும்.

முன்னாள் கல்வியமைச்சுக் கணக்காளர் திரு. இராஜசுப்பிரமணியம், பருத்தித்துறை வட்டாரக் கல்வியதிகாரி திரு, பீ. சச்சிதானந்தம், முன்னாள் அதிபர் திரு. எம். பொன்னையா ஆகியோரும் உரையாற்றினர் பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளர் திரு. கே, சச்சிதானந்தம் நன்றியுரை வழங்கினார். கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.


## சுவரொட்டிகள்

[முருங்கன்]

பறையனாலங்குளச் சந்தியில் உள்ள மைல்க்கல்லில் கடந்த மாத இறுதியில் சில தினங்களாகப் பல சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

இச் சுவரொட்டிகளில் மது ஒழிப்பு சீல்சாராயம் வடிசாராயம், கசிப்பு முதலியவற்றை முற்றாக ஒழிக்கும் படி கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது.

## 3-வது ஆண்டு நினைவஞ்சலி



கந்தையா இராசரத்தினம்
(அளவையாளர்)
தோற்றம்- 19–2–1938 மறைவு: 8-8–1981
பிரிவில் துயருறும்
மனைவி, மக்கள், தாயார், சகோதரர், உறவினர்.
வட்டுக்கோட்டை கிழக்கு. (1241)

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் பதவி வெற்றிடங்கள் பற்றிய அறிவித்தல்

மேற்படி கோவிலில் பின்வரும் பதவிகளுக்கு நியமிப்பதற்காக தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து **31-08-84 வரை விண்ணப்பங்கள்** ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்களை கோவில் நிறைவேற்று அலுவலரிடமிருந்து தபால் மூலமோ அன்றி நேரடியாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

1. கணக்காளர்
2. பதில் குருக்கள்
3. பரிசாரகர் (ஐயர்)
4. மின்சார இயந்திரம் இயக்குனர்
5. பண்டாரம் (பூக்கட்டுபவர்)
6. பல வேலைகாரர் (தொழிலாளி)
7. மேளவாத்தியக்குழு

தி.க. மகாலிங்கசிவம் ஜே.பி.,
செயலாளர்.
(1259)

### மணிவாக்கு

என்னன்பு பணியாய் கனிந்துருகக் கூடிய பலத்தை நல்கும். சுற்றருடன் உற்றுரைய் ஒட்டி உறவாடக் கூடிய பலத்தைத் தந்தருளும், இறுமாப்புற்ற மிருக பலத்தின்முன்னல் அடிபணியாதிருக்கக் கூடிய பலமும் வேண்டும். — கீதாஞ்சலி

# நமது நோக்கு

## யாழ்ப்பாணம்-
## அகதிகள் முகாம்

கொழும்பில் உலக பௌத்த மகாநாடு; கண்டியில் றன்டொலி பெரஹரா- ஆசியாவிலேயே மிகச்சிறந்த காட்சிகளில் ஒன்று. யாழ்ப்பாணத்தில் நல்லூர் மகோற்சவமும் அடியார் கூட்டமும்.

இந்த நாட்டின் தேசிய கலாசாரத்தை உலகுக்எடுத்துரைக்கவல்ல சமூக நிகழ்ச்சிகள் இவை.

இதற்கிடையில் சென்னையில் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் இலங்கையையும் கலக்கி இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் குறிப்பாக, வடபகுதியில் பொதுவாக நடைபெற்றுவரும் அசம்பாவிதங்கள், தாக்குதல்கள் இங்கு வாழும் மக்களுக்கு பீதியை விளைவிக்கின்றது.

வாழ்வின் மத்தியில் சாவு என்றகூற்றுக்கமைய யாழ்ப்பாணத்தில் வெளியாகும் செய்திகள் இப்பகுதி மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கிறது. நீண்டகால நிலைமை மோசமடைகின்றது

இதற்குத் தூபமிடும் செய்தி அரசாங்கத்தின் கோரிக்கையிலிருப்பதென்ருல் இங்குவாழும் மக்கள் இந்நாட்டின் ஒரு பகுதியினராவென்ற சந்தேகம் எழுவது நியாயமே.

பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளை முறியடிக்க பாதுகாப்புப் படையினர் கடும் நடவடிக்கைகளை எடுக்க இருப்பதால் யாழ்ப்பாணத்து மக்கள் தத்தம் வீடுகளிலேயே தங்கியிருக்குமாறுகேட்கப்பட்டுள்ளனர். இதுவே இங்குள்ள பொது மக்களுக்குக் கிடைத்திருக்கும் அவலச்செய்தி.

அவலமென்று குறிப்பிட எமக்கு உரித்தில்லையா? யாழ்ப்பாணத்தில் நடந்த ஆடிக்கலவரத்தில்; பங்குனிப் படுகொலையில் வீட்டுக்குள் பாதுகாப்பாக இருந்த மக்கள் கொல்லப்படவில்லையா?

இவ்விதஅபாயம் மீண்டும் ஒரு பேரழிவைக் கொண்டுவர முடியுமென்ற அச்சம் மக்களுக்கு இருப்பது நியாயமே.

யாழ்ப்பாணத்தின் வடபகுதியான வல்வெட்டித் துறையில் நடைபெற்றதாக் குதல்கள் காரணமக ஆயிரத்துக்கதிகமான மக்கள் அகதிகளாகப் பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களில் பலர் உணவு, குடிநீர் போன்ற தட்டுப்பாடுகளால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலை ஏற்பட்டதனுல் அப்பகுதியில் ஒரு பெரும் 'போர்' நடைபெற்றதாக யூகிக்கவேண்டும். போரின் முழு விபரம் தெரியாதபோதும் இலங்கை ராணுவம் இந்த ஒரு சிறு இடத்தில் இத்தகைய குழப்பத்தை அடக்கி மக்களைப் பாதுகாக்க முடியாத நிலையில் இருக்கிறதாவென்பதே எமது வசனம்!

யாழ்ப்பாணத்தில் நகர் மத்தியில் குண்டுகள் வெடிப்பு, அது ஏற்படுத்திய அழிவு நடந்திருப்பதைக் கண்டும் கேட்டும் மக்கள் ஒதுங்கி வாழப்பழகிவிட்டனர். ஆனுல் பாதுகாப்புப் படையினர் உத்தேசித்திருக்கும் கடும் நடவடிக்கைகள் இங்குள்ள மக்களை எவ்வாறு பாதிக்குமென்பதே இன்றைய கவலை.

எங்கள் மக்கள் அரசியல் நிலைமையை அறியாதவர்கள் அல்ல. அரசாங்கம் வடபகுதியை—ஏன் தமிழ் மக்கள் வாழும் இடங்களை எவ்வாறு பரிபாலிக்கின்றது என்பதையும் அறியாதவர்கள் அல்ல.

ஆனுல் எந்த தர்மசங்கடத்திலும், அதனைச் சிக்கல் படுத்தாமல் தத்தம் கடமைகளை அமைதியாகச் செய்வதுடன் எநத நிலைமையிலும் ஆட்சியில் இருக்கும் அரசுக்கு பங்கம் விளைக்கும் பாரதூரமான செயல்களைத் தவிர்த்துவாழும் சாந்தமான பிறவிகள்.

கடந்த வருடத்திலும் இந்த வருடத்திலும் பல விதமான பேரழிவுக்கு ஆளான பொதுமக்கள் தம் தினசரி வாழ்வே மரணத்துடன் போராடும் வாழ்வாகக் கொண்டு ஒருவித தத்துவப் போக்கில் தம்மைத் திருப்பிவருகின்றனர்.

இந்நாடு, இந்த நாட்டின் பாதுகாப்பு, ஒருமைப்பாடு பண்டைய கலாசாரம், புகழ் என்று நாட்டின் பிரமுகர்கள் உலகறியப் பேசும் போதெல்லாம் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இடம்பெறுவதில்லை.

இன்றைய தேசிய நிலை இதுவென்பதால் தமிழ் மக்கள் பொதுவாக இதுபற்றி ஆச்சரியப்படுவதில்லை, ஏன் கவலை கொள்வதும் இல்லை.

இந்த நிலையில் நாட்டின் பாதுகாப்புப் படையினர் இப்பகுதி மக்களைப் பாதுகாக்க முடியுமென்று நாம் எவ்வாறு நம்புவது? உங்கள் 'பயங்கரவாதிகளே' இந்த நிலையை உருவாக்கியவர்கள் என்ற மறுத்தான் உடனே வருவது இயல்பு.

'பயங்கரவாதம்' என்ற விடயம் இப்பகுதி மக்களுக்கு பழம்பாடம். அதனை ஒழிக்க அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் ஒரு அப்பாவி மனிதனின் உயிருக்கும் தீங்கு விளைக்காதிருக்க வேண்டியபொறுப்பு அதற்குண்டு.

இந்தப் பொறுப்பு கடந்த காலத்தில் எவ்வாறு செயற்பட்டது? இந்த வினு இன்று எழுப்பும் அச்சம் கடந்த ஆடிக்கலவரத்தை நினைவூட்டுகின்றது; அன்று கொழும்பில் அகதி முகாம்கள்: இன்று யாழ்ப்பாணத்திலா?

## ★ காப்புறுதித்திட்டத்தின் கீழ்
# கிளிநொச்சி விவசாயிகளுக்கு ஐந்து லட்சம் ரூபா நஷ்டஈடு

(கிளிநொச்சி)

கடந்த வெள்ளப் பெருக்கின் போது பயிர்அழிவுக்கு ஆளான கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு காப்புறுதித் திட்டத்தின்கீழ் 5 லட்சம்ரூபா நஷ்டஈடுகிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே எடுக்கப்பட்ட மதிப்பீட்டின்படி 3 லட்சம் ரூபா பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு போதுமானது என்று தீர்மானிக்கப்பட்டு அப்பணம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. 3லட்சம்ரூபா போதாது என்று விவசாயிகள் அரசாங்க அதிபர் திரு. என். ஜெயநாதனிடம் ஆட்சேபனை தெரிவித்திருந்தனர்.

இதைத் தொடர்ந்து அரசாங்க அதிபர் திரு. ஜெயநாதன் ஆலோசனை மகாநாடொன்றைக் கூட்டினுர். இம்மகாநாட்டில் கலந்து கொண்ட பயிர் காப்புறுதிப் பணிப்பாளர் திரு. எஸ்.சொலமன் பாதிப்படைந்த விவசாயிகளின் நிலைமைகளை உணர்ந்து மேலும் இரண்டு லட்சம் ரூபா காப்புறுதிப் பணமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதகாக உறுதியளித்தார்.

# மக்கள் கருத்து

## வானெலி நேயர்கள் ஏமாற்றம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் நிகழ்ச்சிகளை மிகவும் தெளிவாகக் கேட்டு ரசித்துவந்த வடபகுதி நேயர்கள் இனிமேல் அவ்விதமாக நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கேட்கமுடியாத ஒருநிலை ஏற்பட்டிருப்பது மிகவும் வருத்தத்தை அளிப்பதாகவே இருக்கிறது, கடந்த எட்டுவருடகாலமாக இலங்கை வானெலி தமிழ் நிகழ்ச்சிகளை மிகவும் தெளிவாகக்கேட்டு ரசிப்பதற்கு துணையாகவிருந்த மண்டைதீவிலுள்ள யாழ். ஒலிபரப்பு நிலையம் மூடப்பட்டதே இதற்குக்காரணமாகும். தமிழ் நிகழ்ச்சிகளைச் சிற்றலை வரிசை மூலமாகத் தெளிவாகக் கேட்க முடியாமலிருந்த வடபகுதி நேயர்களின் நீண்டகாலக் கோரிக்கைக்குச் செவிசாய்க்கும் வகையில் அமைக்கப்பட்ட யாழ். ஒலிபரப்புநிலையம் 1976-ம் ஆண்டு மே மாதமளவில் பரீட்சார்த்த ரீதியாக இயங்க ஆரம்பித்தது! அதே வருடம் டிசம்பர் மாதத்திலிருந்து உத்தியோக பூர்வமாகச் செயற்படத் தொடங்கியது. ஆரம்பத்தில் இருதமிழ் சேவைகளினதும் நிகழ்ச்சிகளை ஒரே அலைவரிசையில் மாறி மாறி ஒலிபரப்புச் செய்யப்பட்டது. மூன்று வருடங்களின் பின் நேயர்களின் ரசனைக்காக இரு வெவ்வேறு அலைவரிசைகளை ஆரம்பித்து தமிழ் சேவை ஒன்றினதும், தமிழ் சேவை இரண்டினதும் நிகழ்ச்சிகளைத் தனித்தனியாக ஒலிபரப்புச் செய்யப்பட்டுவந்தது. இதைத் தொடர்ந்து கடந்த வருட ஆரம்பத்திலிருந்து யாழ். ஒலிபரப்பு நிலையத்தில் மூன்ருவது அலைவரிசையொன்று ஆரம்பிக்கப்பட்டு அதில் ஆங்கில நிகழ்ச்சிகள் ஒலிபரப்புச் செய்யப்பட்டன. இந்த அலைவரிசை சக்தி குறைந்ததாக இருந்தபோதிலும் வடபகுதி நேயர்கள் இதன்மூலம் நிழ்ச்சிகளை ஓரளவு தெளிவாகக் கேட்கமுடிந்தது ஒருவரப்பிரசாதம் என்றே சொல்லவேண்டும்.

இப்பொழுது தமிழ்சேவை இரண்டின் காலை நிகழ்ச்சிகள் காலை 8-30 வரை சிற்றலைவரிசையில் ஒலிபரப்புச் செய்யப்படுவதில்லை. மத்திய அலைவரிசையிலும், எவ். எம். அலைவரிசைலும் மட்டுமே ஒலிபரப்புச் செய்யப்படுகின்றன. எனவே சிற்றலை வரிசையில் நிகழ்ச்சிகளைக் கேட்கும் நேயர்கள் தமிழ்சேவை இரண்டின் காலை 6 00 மணிமுதல் 8.30 மணி வரையிலான நிகழ்ச்சிகளைக் கேட்டு ரசிக்கவே முடியாது. எவ். எம். அலைவரிசையில் தமிழ் சேவை இரண்டின் நிகழ்ச்சிகள் ஒலிபரப்புச் செய்யப்படுகின்றபோதிலும் நேயர்கள் அனைவரிடமும் எவ். எம். அலைவரிசையுள்ள வானெலிப் பெட்டிகளும் இருக்கமுடியாது. இந்தவகையில் மத்திய அலைவரிசை மூலமாக இலங்கை வானெலி நிகழ்ச்சிகளைக்கேட்க முடியாத வடபகுதி நேயர்கள் துரதிர்ஷ்டசாலிகள் என்றே சொல்லவேண்டும்,

பொதுசனத்தொடர்பு சாதனங்களில் ஒன்ருன வானெலி, நேயர்களின் மத்தியில் பெருமளவு முக்கியத்துவம் பெற்றிருக்கும் இக்காலகட்டத்தில் யாழ். ஒலிபரப்பு நிலையம் மூடப்பட்டது நேயர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த கவலையை அளிப்பதாக இருக்கிறது என்பது மட்டும் உண்மை. இந்த விடயத்திவ் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஏதாவது மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதே நேயர்களாகிய எங்கள் விருப்பமாகும்.

அ. கனகசூரியர்
ஊரெழு மேற்கு
சுன்னுகம்.

★ ★

தற்போது இலங்கை வானெலியின் தமிழ் ஒலிபரப்பு யாழ்ப்பாணத்தில் சிற்றலைவரிசையில் பல குழறுபடிகளுக்கிடையில் சில நேரங்களில் கேட்கக் கூடியதாகவுள்ளது, அனுல் இதே சிற்றலைவரிசையில் தற்போதும் ஆங்கில சிங்கள நிகழ்ச்சிகள் குழப்பமின்றி நன்ருக யாழ்ப்பாணத்தில் கேட்கிறதென்பது புரியாத புதிராகவுள்ளது. யாழ்ப்பாணத்து மக்களும் மற்றமாகாண மக்கள்போன்று வானெலி பாவிப்பதற்குரிய அனுமதிப் பத்திரத்திற்கு வரியாக பணம்செலுத்தியே பாவிக்கிருர்கள். அப்படியிருந்தும் இலங்கை வானெலியினர் இப்படியெல்லாம் மாற்ருந்தாய் மனப்பான்மையுடன் ஏனேதானே என்று இயங்குகிருர்கள் என்பது விளங்கவில்லை.

க.சி.இராஜேஸ்வரன்
நல்லூர்

### இன்று நல்லூர்க் கந்தன் 7ம் திருவிழா
## நீங்கும் வினை!

— கீழ்கரவை குலசேகரன் —

நல்லூர் முருகனே நீ நாடு!
நாள்தோறும் அவன் புகழை நீ பாடு!
வல்வினை அறுத்திடுவான் வேரோடு!
வந்தெமைக் காத்திடுவான் வேலோடு!
[நல்லூர்]

சிகரமெனக் கோவில் கொண்டவனை,
செந்தமிழ்க் கடவுள் எங்கள் சண்முகனை
அகத்தினில் அனுதினமும் நீ நினை!
அருள்தந்து காத்திடுவான் ஐயன் உனை!
[நல்லூர்]

தந்தைக்குக் குருவாகி நின்றவனை,
தரணியை வலம் வந்த வேலவனை,
கந்தனை, குகனை நல்லூர் கார்த்தி கேயனை
கருதி வணங்கிடில் நீங்கும் வினை!
[நல்லூர்]

## தோகை மயில் வாகனுவே!

அணிதிகழ அருவியென வெள்ளையந் துகில்போல
ஆரம்ப வடிவு தாங்கி
அதுகரையில் மாணிக் கங்கையென நதிபாய
அதிற்கயல்கள் தத்தியோட
மணிதிகழச் சொல்லுநவ ரத்தினக் கல்லெலாம்
மருங்குநிறை செல்வ மீய
மக்களின் துயரகல வாழ்வருள வந்தவா
வள்ளி தெய் வானை கணவா
பிணியகல வேநினது பேரின்ப வாழ்வு தா
பிறவி நீத் தருளு கண்டாய்
பின்பிறப் பதுவின்றி உன்நினைப்பது வொன்றிப்
பிரியாமல் வாழ அருள்வாய்
துணிவுதரு கதிரைமலை எமகூடம் கதிர்காமச்
சோதியென வந்த முருகா
தோன்றுபுக ழான்றகலை ஈன்றெமக் கென்றருளுந்
தோகைமயில் வாகனுவே!

வே. செல்வநாயகம்

# "சனத்தொகை, மூலவளங்களிடையே சமநிலை இருக்கவேண்டும்"

## உலக சனத்தொகை மகாநாட்டில் உரை!

மெக்ஸிக்கோசிட்டி, ஆக 7 ''உலக சனத்தொகைக்கும், மூலவளங்களுக்குமிடையே சமநிலையை ஏற்படுத்துவதன் மூலமே சனத்தொகைப் பிரச்னைகளைக் கட்டுப்படுத்தமுடியும்'' என்று ஐ. நா. வின் உலக சனத்தொகை நிதியத்துக்கான இயக்குநர் திரு ராபெல் சலாஸ் தெரிவித்தார்.

உலகசனத்தொகை தொடர்பான மகாநாடு தற்போது மெக்ஸிக்கோவின் தலைநகரான மெக்ஸிக்கோசிட்டி' நகரத்தில் இடம் பெறுகின்றது. அம்மகாநாட்டுக்கான செயலாளர் நாயகமாகவும் திரு ராபெல் சலாஸ்விளங்குகின்றார். நேற்று முன்தினம் அம்மகாநாட்டில் உரை நிகழ்த்தும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது: ''சனத்தொகையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்ற போதிலும், இறப்பு வீதத்தை விட பிறப்பு வீதம் கூடுதலாகவே இருந்து வருகின்றது.

சனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அவசியம் எடுக்கவேண்டியவையாயினும் அவை மனித சுதந்திரம், விருப்பு வெறுப்புக்கள், மற்றும் ஏனைய நலன்களைப் பாதிக்காதவையாக இருக்க வேண்டும்.

மூலவளங்களுக்கும், உலக சனத்தொகைக்குமிடையே சமநிலையைத் தோற்றுவிக்க (5ம் பக்கம் பார்க்க)

---

கூகிளாக்ஸ் கிளான்

## பயமுறுத்தல் நடவடிக்கை சோவியத் யூனியனுடையது!

### அமெரிக்க சட்டமா அதிபர் தகவல்

வாஷிங்டன், ஆக 7 ''வளர்முக நாடுகள் சிலவற்றை ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளாமல் தடுக்கும் விதத்தில் சோவியத் யூனியன் பயமுறுத்தல் வேலைகளில் இறங்கியிருந்தது. என்று அமெரிக்க சட்டமா அதிபர் திரு வில்லியம்ஸ்மித் குறிப்பிட்டார்

''கூகிளாக்ஸ் கிளான் என்ற இயக்கத்தின் பெயரில் சோவியத் யூனியன் சுமார் இருபது ஆபிரிக்க. ஆசிய நாடுகளுக்குப் பயமுறுத்தல் கடிதங்களை அனுப்பியிருந்தது. ஒலிம்பிக்கை பகிஷ்கரிக்கச் செய்வதில் சில நாடுகளை உடன்படச் செய்ய முடியாததாலேயே அது கடிதங்கள் மூலமாக பயமுறுத்தலை விடுத்தது'' என்று திரு ஸ்மித் மேலும் கூறினர்.

சோவியத் யூனியனே இந்தப் பயமுறுத்தலை விடுத்தது என்பதனை நிரூபிப்பதற்கான ஆதாரங்களும், அது அனுப்பிய பயமுறுத்தல்கடிதங்களின் பிரதிகளும் தம்மிடம் இருப்பதக அவர் கூறினர்.

விளையாட்டுப் போட்டிகளில் போதை வஸ்துக்களை உட்புகுத்தும் நாடுகள் என்று கியூபா, பல்கேரியா போன்ற நாடுகளையும் அவர் கடுமையாகக் கண்டித்தார். (கி)

## பௌர்ணமிக் கலைவிழா

(பண்டத்தரிப்பு)


காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை நடத்தும் பௌர்ணமிக் கலைவிழா எதிர்வரும் 11ம் திகதி சனிக்கிழமை மாலை சபையின் திறந்த வெளிஅரங்கில் நடைபெறவுள்ளது.

## ★ ஒலிம்பிக் செய்திகள் ★

### பதக்கப் பட்டியல்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 43 | 35 | 14 |
| ருமேனியா | 15 | 9 | 5 |
| சீனு | 13 | 6 | 5 |
| மே. ஜேர்மனி | 7 | 10 | 12 |
| ஜப்பான் | 7 | 4 | 8 |
| இத்தாலி | 7 | 2 | 5 |
| கனடா | 6 | 8 | 7 |
| ஆஸ்திரேலியா | 3 | 7 | 10 |
| பின்லாந்து | 3 | 1 | 2 |
| பிரிட்டன் | 2 | 3 | 11 |
| பிரான்ஸ் | 2 | 2 | 5 |
| நெதர்லாந்து | 2 | 2 | 4 |
| நியூஸிலாந்து | 2 | 0 | 1 |
| மெக்ஸிக்கோ | 1 | 2 | 1 |
| தென் கொரியா | 1 | 2 | 1 |
| பெல்ஜியம் | 1 | 1 | 2 |
| யூகோஸ்லாவியா | 1 | 0 | 3 |

### இறுதிப் போட்டிக்கு பி. ரி. உஷா



400 மீட்டர்கள் தடைதாண்டி ஓட்டத்தின் இறுதிப் பந்தயத்துக்கு இந்திய வீராங்கனையான பி. ரி. உஷா தகுதி பெற்றுள்ளார். இவர் நேற்று அரைஇறுதிப் போட்டியில் 55,54 செக்கன்களில் தமது ஓட்டத்தை நிறைவு செய்தார்.

இவர் பூர்வாங்கப் போட்டியில் 56 81 செக்கன்களில் ஓட்டத்தை நிறைவுசெய்து இரண்டாமிடத்தை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. பி. ரி. உஷா ஒலிம்பிக் ஓட்டப் பந்தயமொன்றின் இறுதிக் கட்டத்துக்குத் தெரிவான முதலாவது இந்தியப் பெண் என்று வர்ணிக்கப்பட்டார்.

### இந்தியா தகுதி இழந்தது

மேற்கு ஜேர்மனிக்கும் இந்தியாவுக்குமிடையே நேற்று ஹொக்கி 'ஏ' பிரிவு லீக் பந்தயமொன்று இடம் பெற்றது. இதில் இந்தியாவும் மே. ஜேர்மனியும் கோல் எதனையும் போடாது சரிசமனுக ஆட்டத்தை முடித்தன. இதனையடுத்து இந்தியா அரை இறுதிக்குப் பிரவேசிக்கும் மற்ருெரு சந்தர்ப்பத்தையும் இழந்தது. '80-மாஸ்க்கோ' ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் பெற்ற இந்தியா, ஆஸ்திரேலியாவிடம் கடந்த வாரம் 4—2 என்ற ரீதியில் தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது. (கி)

## இன்றைய பலன்

மாதம்-ஆடி

திகதி-24(08-08-1984)

வாரம்-புதன்

திதி-துவாதசி முன் இரவு 7-39 வரை

நக்ஷத்திரம்-மூலம் பிற்பகல் 2-21 வரை

மேடம்:- ஆரம்பத்தில் முட்டுக்கட்டைப் போட்டவர்கள் இன்று ஆதரவு கொடுப்பார்கள் காதல் ஜோடிகளுக்குப் பொன்னுனதினம்,

இடபம்:- அதிக நம்பிக்கை ஆபத்தை தேடித்தரலாம் தன்கையே தனக்குதவி என்று செயலாற்றவும்.

மிதுனம்:- சில விடயங்களில் நீங்கள் அதிகம் உணர்ச்சி வசப்படுவீர்கள் கவர்ச்சிகரமானதினம்.

கடகம்:- தொழில்மாற்றம் அல்லது இருப்பிடமாற்றத்திற்கு வழிகோலப்படலாம் இதன் மூலம் பதவி உயர்வும் கிடைக்கலாம்.

சிங்கம்:- புத்திரர்களாலும் புகழுக்கு இடமுண்டு வீட்டில் சுபகாரியம் ஒன்று இடம் பெறலாம்.

கன்னி:- தற்பெருமை தவருனபாதைக்கு அழைத்துச் செல்லும் பொருளும் பலவழிகளிலும் செலவாகும்.

துலாம்:- சிறு விடயங்களில்கூட அதிக ஆத்திரப்படுவீர்கள் வீணை சந்தேகங்கள் தோன்றக்கூடும் சிந்தித்த பின் செயலாற்றவும்.

விருச்சிகம்:- தொழில்துறையில் எதிர்பாராத நஷ்டத்திற்கு மிடமுண்டு புதியமுதலீடுகளை பின் போடவும் உடல்நலத்தைப் பேணி நடக்கவும்.

தனுசு:- நீண்டநாள் பிரச்சினையில் சமரச முடிவுகாணப்படும் ஸ்தலயாத்திரையும்மேற்கொள்ளப்படலாம் மகிழ்ச்சிகரமானதினம்.

மகரம்:- தாய் வழியால் பெருமைகள் சேரும் தனத்துடன் வாழ்வும் கிடைக்கும் எதிரிகள் உங்களை வரவேற்பார்கள்.

கும்பம்:- வரவேற்கவேண்டிய சம்பவங்கள் இடம்பெறும் புத்திரர்களால் பெருமகிழ்ச்சிக்கு இடமுண்டு.

மீனம்:- பூமிப்பிணக்குகளால் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள நேரிடும் வாகனம் செலுத்துவோர் மிகவும் கவனமாக இருக்கவும்

திருமலை

வே. ரவீந்திரன்


யாழ்ப்பாணத்தில் பாரிய நிறுவனமான

மகாராஜா இன்வெஸ்ட்மென்ட்

நிறுவனம் வழங்கும்

புதிய மகாராஜா வைப்புச்சான்றிதழ்

நீங்கள் செலுத்தும் பணத்திலும் பார்க்க இருமடங்கு தொகை கிடைக்கிறது.

வருடாந்த மொத்த வட்டி 33 1/3 வீதம்

| நீங்கள் செலுத்தும் தொகை | மகாராஜா வைப்புச் சான்றிதழின் பெறுமதி | வட்டி வீதம் வருடாநதம் |
|---|---|---|
| ரூபா 2500 | ரூபா 5000 | 33 1/3 வீதம் |
| ரூபா 5000 | ரூபா 10000 | 33 1/3 வீதம் |
| ரூபா 25000 | ரூபா 50000 | 33 1/3 வீதம் |
| ரூபா 50000 | ரூபா 1,00,000 | 33 1/3 வீதம் |

36 மாதங்களில் நிலையான வட்டியுடன்

அதிசிறந்த முதலீடு கிடைக்கிறது.

பல்வேறு வகையான நிலையான வைப்புச்சான்றிதழ்களுக்கு 6 மாதம், 12 மாதம், 24 மாதங்களுக்கும் வழங்கப்படுகின்றன.

முழு விபரங்களையும் காரியாலய நேரங்களில் விற்பனை முகாமையாளரிடம் பெறலாம்.

மகாராஜா

முதலீட்டு நிறுவனம்

122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 24267

மகாராஜா கூட்டு நிறுவனங்களின் பின்பலம் கொண்ட வரையறை செய்யப்பட்ட நிதி நிறுவனம்

இடம்பெயர்ந்த ஆசிரியர் விவகாரம்

# விசாரணைக்குழுவில் மேலும் இருவர் நியமிக்கப்பட்டனர்!

## மகாசிவம் கூற்றுக்கு செல்லச்சாமி மறுப்பு

[கொழும்பு]

''இடம் பெயர்ந்த ஆசிரியர்கள் விவகாரத்தினைவிசாரித்து இடமாற்றம் வழங்குவதற்கென நியமிக்கப்பட்ட குழுவிற்கு எமது செயலாளர் திரு சிவஞானம் உட்பட இருவரைத் தாங்கள் நியமித்திருந்தீர்கள்.

இந்தச் செய்தி பத்திரிகைகளில் வெளிவந்தன. இப்போது, அப்படி இருவர் மேலதிகமாக நியமிக்கப்படவில்லையென்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் விடுத்த அறிக்கைகளை சில பத்திரிகைகள் பிரசுரித்துள்ளன.

இந்த அப்பட்டமான பொய்யை திரு மகாசிவம் ஏன் கட்டவிழ்த்து விட்டிருக்கிறரோ தெரியவில்லை.

எமது ஆசிரியர் சங்கத்துக்கு இது அவமானத்தை ஏற்படுத்துவதாகவும், எமது சங்கத்தின் மீது அங்கத்தவர்களுக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு செய்யப்பட்ட செயலாகும். இது குறித்து தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கல்வி அமைச்சர் திரு ரணில் விக்கிரமசிங்ஹவுக்கு இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் தலைவர் திரு. எம். எஸ். செல்லச்சாமி எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இத்தக் குழுவில் சங்கம் வகிக்கும் ஐவர் வருமாறு:-

எம். ஏச்.ஏச். ஆரியரத்தின [செயலாளர், கல்விச் சேவை ஆணைக்குழு] க. சிவஞானம் (இலங்கை ஆசிரியர்காங்கிரஸ்) எஸ். உபயகுணசேகரா (கல்விச் சேவை ஆணைக்குழு உதவிச் செயலாளர்) கலாநிதி கந்தையா (கல்விச் சேவை ஆணைக்குழு உறுப்பினர்) திரு. காரியவாசம் (கல்விப் பணிப்பாளர், பெருந்தோட்டப் பிரிவு)


ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
முத்துராமன்-காஞ்சன
காதலிக்க நேரமில்லை
(ஈஸ்மன் கலர் - புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - சரோஜாதேவி
என் தம்பி

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
BAD BLOOD
Action-Adults Only
திகிலூட்டும்மர்மச்சித்திரம்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவகுமார்- ஜெய்சித்திரா
விஜயகுமார்
பொண்ணுக்கு தங்கமனசு

வின்சர் (யாழ். நகர்)
தினசரி 10-30. 2-30, 6-30
எம். ஜி. ஆர் -சாவித்திரி
வீரப்பா - சந்திரபாபு
மகாதேவி
(புத்தம் புதிய பிரதி)

மனோகரா (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
சிவாஜி - பத்மினி
சந்திரகாந்தா
சரஸ்வதிசபதம்

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, —2-30,
4-30 — 7-00
Eye For An Eye

றீகல் (யாழ். நகர்)
10-30, 2-15, 4-30, 6-30
Terrence Hill ...
Bud Spencer ... in
"WHO FINDS A FRIEND FINDS A TREASURE"
[Latest Action - Comedy]

லிடோ யாழ். நகர்
Daily
10-30, 2-30, 4-45, 7-15
THE BURNING
(Strictly for Adults)

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர்-லதா நடித்த
நவரத்தினம்
(ஈஸ்மன் கலர்)


### யாருடையது

பாணந்துறை ஜனவீர மாவத்தையைச் சேர்ந்த திரு கைலாசநாதன் செந்தில்நாதன் என்பவரின் அடையாள அட்டையை திரு. ஏ. எம். சுமீம் என்பவரும் மானிப்பாய் அரசடிப் பிள்ளையார் கோயில் ஒழுங்கையைச் சேர்ந்த தவசிநாகேஸ்வரன் என்பவரின் அடையாள அட்டையை திரு கனகசபையும், மண்டைதீவு திரு.விசுவலிங்கம்—இராசலிங்கத்தின் அடையாள அட்டையை திரு.பி. சிவகுமாரும் திரு சின்னையா செல்லத்துரை சிவம் என்பவரின் பிறப்புச் சாட்சிப்பத்திரத்தினை ஒருஅன்பரும் ஏழாலையைச் சேர்ந்த திரு.செல்லத்துரை சக்கரவர்த்தி என்பவரின் அடையாள அட்டையை 29ம் திகதி 8291 வான் உரிமையாளரும் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள் உரியவர்கள் அலுலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

### உலக...

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

வேண்டும். அத்துடன் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் மக்களுக்கு மூலவளங்களைக் கிடைக்கச் செய்வதிலும் துணைபுரிய வேண்டும்.'' என்றார்.

திரு சலாஸ் மேலும் உலகில் உணவை உற்பத்தி செய்வது பெரிய பிரச்னையல்ல வென்றும் போதுமானளவு உணவு உற்பத்தி செய்யப்பட்டே வருகின்றதென்றும், ஆனல் அவ்வுணவை மக்களுக்கு கிடைக்கச் செய்யும் விடயத்திலும், பங்கீடு செய்வதிலுமே, சனத்தொகைப் பெருக்கம் இடையூறாகஇருக்கிறதென்றும் குறிப்பிட்டார்.

மெக்சிக்கோசிட்டியில் இவ் உலக சனத்தொகை மகாநாட்டை மெக்ஸிக்கோ ஜனதிபதி ஆரம்பித்து வைத்தார். (கி)

### வெள்ளி விழா

[சாவகச்சேரி]

கைதடி கிழக்கு வளர்மதி சனசமூக நிலையத்தின் வெள்ளி விழா நிலையத்தலைவர் எஸ். சிவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

வெள்ளி விழாவையொட்டி வட மாகாண ரீதியிலான தாச்சிச் சுற்றுப் போட்டியும், கரபந்தாட்ட சுற்றுப் போட்டியும் நடத்தி வெற்றி பெறும் விளையாட்டுக் கழகங்களுக்கு வளர்மதி வெற்றிக் கேடயங்களும் வழங்கப் படவுள்ளது.

மேற்குறிப்பிட்ட போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் நிலையச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

வெள்ளி விழா இறுதியில் மலர் ஒன்றும் வெளியிடப்படும்.

### பஸ் மீது நடந்த துப்பாக்கிப் பிரயோகம்

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் டிப்போவைச் சேர்ந்த பஸ்ஸைநோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட்டதால் ஒரு வயோதிப மாது காயமடைந்துள்ளார்.

யாழ்.பழைய பூங்கா வீதியைச் சேர்ந்த திருமதி.இமானுவல் (72வயது] என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

குறிப்பிட்ட மணிக் கூட்டுக் கோபுரத்துக் கருகாமையில் நேற்று முன்தினம் பிற்பகல் வந்து கொண்டிருந்த பொழுதே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாம். இந்த பஸ்ஸில் சில பிரயாணிகள் மட்டுமே இருந்தனராம்.

பஸ்ஸின் வெளிப்புறத்தில் சுமார் 35 துப்பாக்கிச் சூடுபட்ட அடையாளங்கள் காணப்பட்டன. (மா)

### ரூபவாஹினி

மாலை

5-30 நாட்டுவளம் [தமிழ்]
5-35 'கிரேட் ஸ்பேஸ் கோஸ்ரர், [ஆங்கிலம்]
6-00 'மலரும் அரும்புகள்' சிறுவர் நிகழ்ச்சி [தமிழ்]
6-30 தேகாரோக்கிய நிகழ்ச்சி (சிங்களம்]
7-15 நாட்டுவளம்
7-45 'என்டர் ரெயினேர்ஸ் ஒன்டுவர்' இசை நிகழ்ச்சி [ஆங்கிலம்]
8-15 செய்திகள் [சிங்களம்]
8-45 'மஞ்சள் முகமே வருக' தமிழ்த் திரைப்படம்
9-30 செய்திகள் [ஆங்கிலம்]
9-50 திரைப்படத் தொடர்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 திரைப்படத் தொடர்ச்சி
11-30 நிகழ்ச்சிகள் முடிவு

### வேலக்கை பாடசாலையை வளர்த்தவர்

அந்தச் சிறிய பாடசாலையின் மாணவர் தொகை 23; பத்தாண்டுகளுக்குள் அத்தொகை 225 ஆக உயர்ந்தது! அப்பாடசாலை ஆரம்பவகுப்புகளைக் கொண்டதாக இருந்த போதிலும், இன்று சிறந்த பாடசாலையாக மானிப்பாயில் விளங்குகிறது.

அரசாங்கப் பாடசாலையென்ற மனோபாவமில்லாது, சொந்தப்பாடசாலையென்ற உணர்வோடு, தன்னலமற்ற பணியாற்றி மானிப்பாய் வேலக்கை விவேகானந்த வித்தியாசாலையை வளர்த்த அதிபர் திரு. சு கந்தசாமி இப்போது ஓய்வு பெற்றுள்ளார்,

சிறுகொட்டில்போன்று காட்சியளித்த இப்பாடசாலை இரண்டு கட்டிடங்களைக் கொண்டதாக மிளிர்கிறது. பெற்றோர், நலன் விரும்பிகளுடன் சேர்ந்து இப்பாடசாலையை வளர்த்த பெருமை ஓய்வு பெற்றுள்ள திரு. சு. கந்தசாமியையே சாரும்.

வேலக்கையில் ஏந்திய பிள்ளையான முருகன் ஆலயத்தின் அருகே அமைந்துள்ள இப்பாடசாலையில் கல்விபயிலும் மாணவர்கள் கடவுள் பக்தியுள்ளவர்களாக வளர்வதற்கு ஏற்ற சூழ்நிலையில் அமைந்துள்ளதைப் பயன்படுத்தி, தினமும் காலையில் மாணவர்களை ஆலய முன்றலில் பிரார்த்தனையில் ஈடுபடுத்தினர். அதிபர் கந்தசாமி!

அமைதியும், அடக்கமும் இவரது பண்புகள். சிறுபிள்ளைகளின் மனோநிலையைப் புரிந்து கொண்டு, அவர்களை ஒழுக்க சீலர்களாகவும், கல்வியைப் பெறும் சீலர்களாகவும் ஆக்கும் பணியில் அவர் வெற்றி பெற்றார்.

ஆறுபேர் ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றதற்கும் ஓய்வுபெறும் அதிபரும் ஒரு காரண கர்த்தா.

பாடசாலை வளர்ச்சியே நோக்கமாகக்கொண்டு அவர் ஆற்றிய சேவையின் நினைவாக அப்பாடசாலை நிலைத்து நிற்கும்.

—கா. ஜெகதீசன்

### நித்திய பூஜைகள்

[யாழ்ப்பாணம்]

முழங்காவில் செல்வயோக சித்தி விநாயகர் ஆலயத்தில் விஷேட அபிஷேகத்துடன் நித்திய பூஜைகள் ஆரம்பமாகியுள்ளன.

இவ்வாலயத்துக்குள் வெள்ளம் புகுந்ததால், பூஜைகள் சில நாட்கள் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தன.

### சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை ஆஸ்பத்திரி பிரான் பற்று வீதி சிரமதானம் மூலம் திருத்தியமைக்கப் பட்டது. இச் சிரமதானப் பணியை வட்டுக்கோட்டையயன் கழகத்தலைவர் டாக்டர் ரி.பகிரதன் ஆரம்பித்து வைத்தார்.

திரு.க.ச.கந்தசாமி சிரமதானத்தின் நோக்கம் பற்றி விளக்கிக் கூறினர். இச் சிரமதானப்பணியில் பல இந்து இளைஞர் சங்கங்களும், தொண்டர்களும் கலந்து கொண்டனர்.

### ஊர் வாய்

நக்கீரர்

இந்து சமய முறைப்படி நடந்த மரணச் சடங்கின் போது சுடலையில் நடந்த நாடகத்தைப் பார்த்துவிட்டு நாம் தலை குனிந்ததைப் பற்றி சடந்த புதன் விளக்கினேம். இந்து சமூக மக்களிடையே இருக்கும் இந்தக் குறைபாட்டைத் தெரிவு படுத்தியமைக்காக நன்றி தெரிவித்துப்பலவாசகர்கள் எழுதியிருந்தார்கள். இது எங்களுக்குள்ளே இருக்கும் குறைபாடு இதை ஏன் அம்பலப்படுத்துவான் என்று ஒரு டொக்டர் எழுதியிருந்தார், மாந்தருள் மூவகை உண்டு என்று யாரோ ஒருஞானி கூறியிருக்கிருர். ஒருவகையினர்பிறரின் அல்லது பிறசமூகத்தினரின் நல்லவற்றையே கூறிக் கொண்டிருப்பார்கள். இன்னெருவகையினர், வள்ளுவர் முறைப்படி குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிகுந்திருப்பதையே எடுத்துக் கொள்வவார்கள் தாழ்வு மனப்பான்மை கொண்ட மூன்றும் வகையினர் கண்களுக்கு தீயவைதான் தெரியும் எமக்குக் கடிதம் எழுதிய டொக்டர் முதலாம் வகையைச் சேர்ந்தவர் போலும் என்றும் தம்மிடம் வரும்நோயாளியைப் பரிசோதித்தபின் டொக்டர், நோயாளியிடம் என்ன வருத்தம் இருக்கிறது என்பதைக் கூறத்தவறமாட்டார் என நம்புகிறேம். நாமும் சமூகத்தின் நோய்களை அவ்வப்போது கூறுவது இதேபோல் நல்ல நோக்கத்துடன்தான். அன்றொரு நாள் நான் பாண்டிய மன்னன் அவையிலே எல்லாம் வல்ல ஈசனுடன் நேருக்கு நேர் மோதிக் கொண்டதும் ஒரு குறையைத் தெரிவித்தாலே தான். அது ஒரு புறமிருக்க சமூகத்தின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டித் திருத்த முயலாத பத்திரிகை இருந்தென்ன இல்லாவிட்டாலென்ன.

எமது மக்களிடையே உள்ள ஒரு குறைபாட்டை வழக்கறிஞர் ஆர். பாலசுப்பிரமணியம் சில நாட்களுக்கு முன் எமக்குக் கூறிக் கொண்டிருந்தார். பெரும் வல்லரசுகளுக்கிடையே உள்ள எல்லைப் பிரச்சனை போல் எமது ஊர் மக்களிடையே எல்லைச்சண்டைகள் அடிக்கடி தோன்றுவதை இவர் கூறி வருத்தப்பட்டார், வேலியை ஒரு அடி தள்ளிப் போடுவதற்காக ஆயிரக்கணக்கில் பணம் செலவழித்து பல வருடங்களாக வழக்கு நடத்துவார்கள் எத்தனை ஆயிரம் செலவு போனலும் பரவாயில்லை இவனுக்கு நான் விட்டுக் கொடுக்க மாட்டேன்' என்று தம்மிடம் வழக்காளிகள் கூறுவார்களாம். இதைக் கூறிவிட்டு திரு. ஆர், பாலசுப்பிரமணியம் ஒரு சுவையான சம்பவத்தைக் கூறினர். ஒரு காணியின் எல்லையை அரை அடி தள்ளிப் பாடும் வழக்கில் இருவர் பலத்த போட்டியில் ஈடுபட்டுக்கொண்டார்களாம். தானும் இன்னெரு வழக்கறிஞரும் இரு வழக்காளிகளையும் எவ்வளவு சமாதானப் படுத்த முயன்றும் தோல்விதான் கிடைத்ததாம். ஒரு நாள் தனது வழக்காளியிடம் கதைத்துக் கொண்டிருந்த போது அவர் கொஞ்சம் பொறுங்கள் நான் ஒருகார் பிடித்துக் கொண்டு வாறன் அந்தக் காணியை இன்னெரு முறைபார்ப்போம்' என்றூராம்

''வேண்டாம், அந்தக்கார்க் கூலியை விடக் குறைந்தது. நீங்கள் சண்டை பிடிக்கும் காணியின் விலை என்றூராம் திரு. பாலா.

ஒரு பழைய கதை ஞாபகத்திற்கு வருகிறது தெருவாலே போன பிரபல வழக்கறிஞர் ஒருவரிடம் பத்துரூபாத்தாளை ஒருத்தர் கொடுத்து ''ஐயா இது செல்லுமோ செல்லாதோ என்று பார்த்துச் சொல்லுங்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

கள்'' என்றூராம் அதை எடுத்துப் பார்த்த வழக்கறிஞர் ''இது நல்ல காசு செல்லும் ''என்றுவிட்டுத் தன் பையிலே போட்டுக்கொண்டாராம். ஏனென்று கேட்டதற்கு ''அதுநான் ஆலோசனை கூறியதற்குப் ஃபீஸ்'' என்றுவிட்டுப் போனூராம்.

''நல்லூர்க்கந்தன் உற்சவத்தை

# வழமைபோல் நடத்த ஒத்துழைக்கவும்''

## யாழ். மாநகர ஆணையாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

''தமிழ் மக்களுக்கு பொதுவாகவும்' சைவப் பெருமக்களுக்கு குறிப்பாகவும் முக்கியமான உற்சவமாகிய நல்லைக் கந்தன் உற்சவத்தை எதுவித தடங்கலும் இன்றி வழமைபோல நடாத்த ஆலய நிர்வாகமும், மாநகராட்சி மன்றமும் எடுத்துள்ள முயற்சிகளுக்கு சகலரது ஒத்துழைப்பும் கோரப்படுகிறது.,

இவ்வாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வி கே, சிவஞானத்தால் விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோளில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அவ் வேண்டு கோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

''இம் மாதம் 2ம் திகதி ஆரம்பமான நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவம் இம் மாதம் 27ம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும் காலத்தில் கடந்த ஆண்டைப் போலவே இவ்வருடமும் பொலிசார் கடமையில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள்.

''இதனால் வழமையாக அமைக்கப் பட்டிருக்கும் 5 தடை முகாம்களையும் சராணர் இயக்கம், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ், படையினர், இந்து இளைஞர் சேவை உறுப்பினர்கள், அவ்வப்பகுதி தொண்டர்களை ஒருங்கிணைத்து மாநகராட்சி மன்றம் நிர்வகித்துவருகிறது.

தடைமுகாம்களில் கடமையிலிருந்து சமயப் பணியாற்றும் தொண்டர்களுக்கு ஒத்துழைப்பு நல்குதல் வேண்டும். மாநகராட்சி மன்றம் ஏற்படுத்தியிருக்கும் தற்காலிக நிரந்தரக்கடைகளை தவிர்ந்த இடங்களில் குறிப்பாக இந்து விடுதியிலிருந்து நல்லூர் குறுக்கு வீதி வரையிலான பருத்தித்துறை வீதியிலும் இருபக்க தடை முகாம்களுக்குட்பட்ட கோவில் வீதியிலும் எதுவித தற்காலிக அமைப்புகளும் ஏற்படுத்தாமலும் வர்த்தக நிலையங்களை ஸ்தாபிக்காமலிருத்தல் வேண்டும்.

தடைமுகாம் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அனுமதிப்பத்திரம் மூலம் துவிச்சக்கரவண்டிகளையோ, வாகனங்களையோ கொண்டுசெல்பவர்கள் சுவாமி வீதிவலம் வரும் நேரத்தில் அவற்றை பிரயோகிப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஏனைய நேரங்களில் கூடுமானவரையில் சைக்கிள்களை உருட்டிச் செல்வதுடன் வாகனங்களை மிக மெதுவாகச் செலுத்துவதன் மூலம் அடியார்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தாமலிருத்தல்வேண்டும்.

''ஆலயத்தினுள் வழிபாட்டை முடித்துக் கொண்டவர்கள் ஏனைய அடியார்களுக்கு வசதியளிக்குமுகமாககூடுமானவரை ஆலயத்துக்கு வெளியே செல்லுதலும், ஆலயத்துக்கு வெளியேயுள்ளவர்களும் வழிபாடு பிரார்த்தனை ஆகியவற்றை முடித்துக்கொண்டதும் ஆலய சுற்றாடலிலிருந்து தத்தமது இல்லங்களுக்குத் திரும்புதல் வேண்டும்.

''கூடுமானவரை ஆபரணங்கள் அணிந்து ஆலயம் வருவதைத் தவிர்த்துக் கொள்ளுதல் சிறந்தது.

''அவ்வப்போது மாநகராட்சி மன்றத்தினால் விடுக்கப்படும் கோரிக்கைகளுக்கிணங்க ஆலய சுற்றாடலை துப்பரவாக வைத்திருக்க ஒத்துழைத்தல் வேண்டும்.

''நல்லைக்கந்தன் ஆலய சுற்றாடல் ஒரு பக்திபூர்வமான இடமாகத் திகழவேண்டுமென்பதே எமது விருப்பம். இதற்கு மாறாக பல்வேறு இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் அமைத்து அசௌகரியமான சூழ்நிலையை உருவாக்க சிலர் முயல்வது மிகவும் வேதனைக்குறியதாகும். இப்படியான முயற்சிகளை தடுப்பது அல்லது தவிர்ப்பது பொது மக்கள் கையில்தான் தங்கியுள்ளது.''

## யாழ்ப்பாணம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டன.

பஸ் நிலையத்தில் வாகன நடமாட்டம் மிகக் குறைவாகவே இருந்தது. மரக்கறிச் சந்தை வழக்கம்போல் நடைபெறவில்லை. யாழ். அரசினர் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதியில் நோயாளிகள் மிகக் குறைவாகக் காணப்பட்டனர்.

தனியார் ரியூட்டரிகளுக்கு மாணவர் வரவு மிகக் குறைவாக இருந்தது. ரியூட்டரிகளுக்கு வந்த மாணவர்களும் திரும்பிச் சென்றனர். தூர இடத்திற்கான பஸ் சேவை எதுவும் நடைபெறவில்லை.

யாழ். செயலகம் நேற்று நண்பகல் 1-30 மணியுடன் மூடப்பட்டது.

மற்றும் யாழ். அரச கூட்டுத்தாபனங்களும், தனியார் நிறுவனங்களும், வங்கிகளிலும் உள்ள ஊழியர்கள் நணபகலுடன் தங்கள் கடமைகளை முடித்து வீடுகளுக்குச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாநகரசபையும் நேற்றுப் பிற்பகல் 3 மணியுடன் மூடப்பட்டது. (க-மா)

## 'அமிர்' யாழ். திரும்புகிறார்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைகூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், இன்று யாழ். திரும்புவார்.

உண்ணவிரதம் தொடர்பான ஏற்பாடுகளை கிழக்கும காணத்தில் செய்யவிருந்த திரு அமிர்தலிங்கம், அப்பயணத்தை ஒத்திபோட்டுவிட்டு இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

## அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்க எரிந்தஇடிபாடுகளுக்குள் கண்டெடுத்த எலும்புத்துண்டுகள் பற்றிய சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை நேற்று சமர்ப்பிக்கப்படவில்லை.

இந்த அறிக்கை யழ். நீதவான் எஸ் நாகராசா முன்னிலையில் இம்மாதம் 10-ம் திகதி சமர்ப்பிக்கப்படும்.

சட்டவைத்திய அதிகாரி நேற்று வராததனால் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படவில்லை.

## யாழ். மக்களு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ளும்படைந்திருந்தனர். இது குறித்து யாழ்ப்பாணம் பதில் அரச அதிபர் திரு. பஞ்சலிங்கம் கொழும்பிலுள்ள உயர் அதிகாரிகளையும் வானொலிப் பணிப்பாளரையும் தொடர்பு கொண்டு வற்புறுத்தியதின் பேரில் நேற்று காலை 7-30 மணிக்கு வானொலியில் திருத்தச் செய்தியொன்று வெளியிடப்பட்டது.

இச் செய்தியின்படி யாழ்ப்பாண மக்கள் அவசியமான அலுவல்களைத் தவிர அநாவசியமாக வீதிகளில் திரிய வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

## இலங்கை வங்கி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படும் இக் குண்டு வெடிச் சத்தம், பத்து மைலுக்கு அப்பாலும் கேட்டதென்று கூறப்படுகிறது.

லொறி ஒன்றிலும், மினி பஸ் ஒன்றிலும் ஆயுதந் தாங்கிய ஏராளமானவர்கள்காணப்பட்டதாக ஆஸ்பத்திரி நோயாளி ஒருவர் தெரிவித்தார்.

நேற்றுக் காலை வங்கிக்கு வந்த ஊழியர்கள் பிற்பகல் திரும்பிச் சென்றனர். இன்று வங்கிமூடப்பட்டிருக்கும் என்று வங்கி பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார். (க)

## கொலை என்று...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராசா மரணவிசாரணை நடத்தினார்.

மரண விசாரணையில் சுப்பிரமணியம் தவராசா என்பவர் சாட்சியமளிக்கையில், தான் தொழிலுக்குப் போகும்போது இறந்தவரும், மனைவியும், மகாலிங்கமும், ராதாவும் ஒழுங்கையில் தர்க்கப்பட்டுக்கொண்டிருந்ததாகவும், மகாலிங்கம் கத்தியைப் பறித்து இரு தடவை இறந்தவரை வெட்டினாரென்றும், முதல் வெட்டுக் கையிலும் இரண்டாவது வெட்டு நெஞ்சிலும் பட்டதாகவும், ஞானசேகரம் இரத்தம் தோய்ந்த நிலையில் விழுந்து விட்டாரென்றும் கூறினார்.

விசாரணை முடிவில் நீதவான் கொலையெனத் தீர்ப்பளித்து சந்தேகநபரைக் கைதுசெய்யுமாறு பொலிசாருக்குக் கட்டளையிட்டார்.

யாழ் நீதிமன்ற நீதவான் எஸ் நாகராசா முன்னிலையில் நேற்றுக் காலை சந்தேக நபரான மகாலிங்கம் ஆஜர்செய்யப்பட்டார். சந்தேகநபரை ரிமாண்டில்வைத்து வழக்கை இம்மாதம் 10ம் தேதிக்கு ஒத்திவைத்தார். [க]

# காயமடைந்தவர் மரணமானார்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில்நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின் போது காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த 54 வயதான எம். இம்மானுவேல் நேற்று மரணமானார்.

யாழ். நகரில், தொடர்ச்சியாக துப்பாக்கிச்சூடுநடைபெற்றபோது இவர் காயமடைந்திருந்தார் எனக்கூறப்படுகிறது.

பழையபூங்கா வீதியைச் சேர்ந்த இவர், சம்பவம் நடந்த தினம் மாலை 5 மணிக்கு, வீதியோரத்தில் சென்று கொண்டிருந்தபோது, தோளில் சன்னமொன்று பட்டதாகவும் உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் கூறடபடுகிறது. (க)

## சிற்றம்பலம் வீடு தாக்கப்பட்டது

(வவனியா)

வவனியா மாவட்டசபை முன்னாள் தலைவரும், பிரபல சட்டத்தரணியுமான திரு. மு. சிற்றம்பலத்தின் வீடு நேற்று முன்தினமிரவு தாக்கப்பட்டதன் காரணமாக இவ்வீட்டிலிருந்த பல லட்சம் ரூபாபெறுமதியான பொருட்கள் சேதமடைந்துள்ளன.

இவரின் வீடு வவனியாவில் குடியிருப்பு என்றஇடத்திலுள்ளது.

## நல்லூர் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமிகோயில் உற்சவம் வழமைபோலவே நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் மாலை யாழ்நகரில் ஏற்பட்ட சூட்டுச்சம்பவங்கள், குண்டு வெடிப்புகள் ஆகியனகாரணமாக உற்சவ ஒழுங்குகளில் மாற்றங்கள் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மாநகரசபை ஆணையாளர் திரு சி. வீ. கே. சிவஞானத்துடன் தொடர்பு கொண்டபோது, ஆலய திருவிழாநேரங்களில் எதுவித மாற்றமும் செய்யப்படவில்லை என்றும், வழமைபோலவே சுவாமிவெளிவீதிவலம் என்பன இடம்பெறும் என்றும் தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்; நேற்று முன்தினம் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் ஆலயச்சுற்றாடலில் எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்றும், அடியார்கள் வரவுகுறைவாகக்காணப்பட்டபோதிலும், அவர்கள் எதுவிதபாதிப்புக்குமுள்ளாகவில்லை என்றே தாமறிந்ததாகவும் குறிப்பிட்டார். (கி)

## ஆட்சேபம் மீது இன்று தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட 3 இளைஞர்களை அடையாள அணிவகுப்பில் நிறுத்துவதற்கு தெரிவிக்கப்பட்ட ஆட்சேபம் தொடர்பான தீர்ப்பு இன்று புதன் கிழமை வழங்கப்படும்.

யாழ் நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் அடையாளஅணிவகுப்பு நடத்துவதற்கு பொலிஸார் விண்ணப்பித்தபோது சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளான ஆர். விஸ்வநாதன், வி. பரமசிவம்பிள்ளை ஆகியோர் ஆட்சேபனை தெரிவித்து, தங்கள் சமர்ப்பணங்களை எடுத்துக் கூறியிருந்தனர். [க]

## இடம் பெயர்ந்த...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோருடன் தொடர்பு கொண்ட அரசாங்க அதிபர், இடம் பெயர்ந்த குடும்பங்கள் மீண்டும் தத்தமது வீடுகளுக்கு செல்வதற்கு வசதியை ஏற்படுத்துவதற்காக பாதுகாப்பு படையினரை கண்காணிப்பு வேலைகளை நிறுத்தி வல்வெட்டித்துறையிலிருந்து வெளியேற்றுமாறு கேட்டுள்ளார்.

விசாரணைக்காக சரண் புகுந்த இளைஞர்களையும் மாணவர்களையும் உடனடியாக விடுதலை செய்யுமாறும் அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

## ஆழிக்குமரன் உயிர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நீந்த ஆரம்பிக்கு முன்னர் மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்பட்ட ஆனந்தன், 'இந்தச் சாதனை மூலம், இலங்கைத் தமிழன் பெருமையை உலகறியச் செய்வேன்'' என்று கூறினார்.

பாக்கு நீரிணையை தனது பத்தொன்பதாவது வயதில் நீந்திக் கடந்த ஆனந்தன் தலைமன்னார் — தனுஷ்கோடி கடலை இரு தடவை நீந்திச் சாதனை செய்தார்.

இவ்விதம் பல்வேறு உலக சாதனைகளைச் செய்து, 'கின்னஸ்' உலக சாதனைகள் புத்தகத்திலும் இடம் பெற்றவர் ஆனந்தன்.

பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியும், சட்டத்தரணியுமான ஆனந்தன், மானில் என்பவரை மணந்து, இரு குழந்தைகளுக்குத் தந்தையாவார்.

சில வருடங்களுக்கு முன்னர் கொழும்பிலுள்ள தனது வீட்டு ஒழுங்கையில் காரொன்றில் அடிபட்டு, உயிருடன் போராடி மறு பிறவி எடுத்தவர் ஆனந்தன். வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் விவேகானந்தன் தம்பதிகளின் மூத்த புதல்வன்.

## ஆனந்தன் கனவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகவலை பிரிட்டனில் இருந்து வெளியாகும் 'ஏஸியன் டைம்ஸ்' என்ற பத்திரிகை ஆழிக்குமரன் ஆனந்தனின் ஆங்கிலக் கால்வாயை நீந்திக்கடக்கும் முயற்சியைப் பாராட்டும் வகையில் வெளியிட்டிருந்தது.

''எனது வலது கால் இடுப்புப் பகுதியுடன் தகடொன்றினாலேயே இணைக்கப்பட்டுள்ளது ஓடுவதை, மற்றும் ஓட்டம் சம்பந்தப்பட்ட பயிற்சிகளில் இறங்குவதைத் தவிர்க்கும்படி வைத்திய ஆலோசனை தந்துள்ளார்கள் ஆனால் சைக்கிள் ஓட்டவும், நீந்தவும் அனுமதியளித்துள்ளார்கள்'' என்று இப் பத்திரிகைக்கு ஆனந்தன் பேட்டியளித்திருந்தார்.

''சட்டத்தரணியான குமார் ஆனந்தன் எப்போதும் உயர்வானவற்றை அடைவதில் துணிச்சலுடன் ஈடுபடும் ஒருவராக இருக்கிறார்'' என்றும் ஏஸியன் டைம்ஸ் வர்ணித்திருந்தது. (கி)

## மரண அறிவித்தல்

### சங்கரன் மனோகரன்

யாழ்ப்பாணம் விக்டோரியா வீதியைச் சேர்ந்த சங்கரன் மனோகரன் (மணி) பட்டயக் கணக்காளர் (லண்டன்) காலமாகிவிட்டார். இவர் குமுதினியின் அன்புக் கணவரும், திரு., திருமதி சங்கரன் (சுபாஸ் ஹோட்டல், சுபாஸ் கபே உரிமையாளர்) அவர்களின் அன்பு மகனும், ஹரிகரன், நிமலாகரன், திவாகரன், கெஜாகரன், தயாகரன், ஷீலாதேவி, சுதாகரன் ஆகியோரின் அருமைச் சகோதரனும், கொட்டாஞ்சேனையைச்சேர்ந்த பிரபலவர்த்தகர் M.K. கிருஷ்ணன் தம்பதிகளின் மருமகனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் 37, விக்டோரியா வீதி இல்லத்திலிருந்து 09-08 84 வியாழக்கிழமை காலை 11 மணியளவில் வில்லூண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

1261

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.